# பெறுகை அறிவித்தல்
# வலிகாமம் கிழக்கு பிரதேசசபை
# புத்தூர்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பெறுகைக்காக கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாக கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில்(Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், பெறுகை ஆவணம் பகுதி 11 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 16.00 மணிவரை **30.09.2024** ஆம் திகதியிலிருந்து **13.10.2024**ஆம் திகதி வரையயான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள வழங்குனர்கள் ஆங்கில மொழியிலுள்ள பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி , புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் **30.09.2024** தொடக்கம் **13.10.2024** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப **9.00** மணி முதல் **15.00** மணி வரையும், **14.10.2024** ஆம் திகதி மு.ப **9.00** மணி முதல் நண்பகல் **12.00** மணி வரையும் மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/- (வற் தவிர்த்து)செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து **14.10.2024 ஆம்** திகதி நண்பகல் **12.00 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரா் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
08. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49(நாற்பத்தொன்பது) நாட்கள் 02.12.2024 வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் **07.10.2024**ஆம் திகதியன்று மு.ப **10.00** மணிக்கு நடைபெறும்.

| இல | ஒப்பந்த இல | பெறுகை விபரம் | எண்ணிக்கை | ஒப்பந்த காலம் | கேள்வி பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (ரூபா) | வைப்பு செல்லு படியாகும் காலம் |
| 01 | **NP/14/41(13)/AC3/Computer/2024** | **Computer Set** | **04 Nos** | 30 நாட்கள் | 20,000.00 | 77 நாட்கள் (30.12.2024) |
| 02 | **NP/14/41(13)/AC3/Photo Copier/2024** | **Photo Copier** | **01 Nos** | 30 நாட்கள் | 15,000.00 | 77 நாட்கள் (30.12.2024) |
| 03 | **NP/14/41(13)/AC3/Smart Panel/2024** | **Smart Panel** | **01 Nos** | 30 நாட்கள் | 15,000.00 | 77 நாட்கள் (30.12.2024) |
| 04 | **NP/14/41(13)/AC3/Colored Waste Bin/2024** | **Colored Waste Bins** | **80 Nos** | 45 நாட்கள் | 15,000.00 | 77 நாட்கள் (30.12.2024) |

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.

30.09.2024